402—

மருத்துவமனை தரம் உயர்த்துதல்

***31247—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், சிறுகாம்பூரில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை முப்பது படுக்கைகள் கொண்ட முழுநேர மருத்துவமனையாக மாற்றம் செய்து, தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகாம்பூரில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை முப்பது படுக்கை வசதி கொண்ட முழுநேர மருத்துவமனையாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஏற்கெனவே அந்த ஒன்றியத்தில், மண்ணச்சநல்லூரிலும், ஓமந்தூரிலும் மருத்துவமனை—அரசு மருத்துவமனை—செயல்பட்டு வருகிறது. எனவே அந்த மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தினாலே எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் அங்கே தரம் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-05

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுகாம்பூரில் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் மண்ணச்சநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அது ஒன்றியத்தின் தலைமையிடமாகும். மேலும் என்னுடைய தொகுதியில் ஓமந்தூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. நோயாளிகள் பெருமளவில் வருகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த 2 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட முழுநேர மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 மே 8]

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்ணச்சநல்லூரிலும், ஓமந்தூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. மண்ணச்சநல்லூரில் வட்ட மருத்துவமனையும், ஓமந்தூரில் வட்டம் சாரா மருத்துவமனையும்தான் இப்போது செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அந்த 2 மருத்துவமனைகளிலும் போதுமான மருத்துவர்கள், படுக்கை வசதிகள் குறைவாக இருப்பது என்பது உண்மைதான். தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக உலக வங்கி இப்போது இதுபோன்ற மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு நிதி உதவி அளிப்பதற்கு முன்வந்திருக்கிறது. உலக வங்கியினுடைய நிதி உதவியுடன் மண்ணச்சநல்லூர் வட்ட மருத்துவமனையையும், ஓமந்தூர் வட்டம் சாரா மருத்துவமனையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப 30 படுக்கைகள் கொண்ட தரம் வாய்ந்த மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 403, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

403—

அவசர சிகிச்சைப் பிரிவு

***35825—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை புறநகர் மருத்துவமனை, சின்ன ஸ்டான்லி மருத்துவமனையில் எப்போதும் இயங்கும் வகையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS